**சுருக்கம்**

பள்ளிக்கல்வி - பொது நூலகங்கள் - 2021-2022-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – "முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகம்" என்ற பெயரில் நூலக கட்டடம் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (பொ.நூ.1) துறை**

அரசாணை (நிலை) எண். 159

நாள் 22.11.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம், கார்த்திகை 6

படிக்கப்பட்டவை:

1. பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.43 வரிசை எண்.11-இல் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.08.2021.
2. பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.5642/உ2/2021, நாள் 14.09.2021.

******

**ஆணை:-**

26.08.2021 அன்று 2021-22-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள், ஏனையவற்றுள் வரிசை எண். 11-இல் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்:-

**"முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகம்"**

"தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கியப் பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படும் பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களை நினைவு கூறும் வகையில் அவர் பிறந்த ஊரான மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் மாதிரி நூலகம் அமைக்கப்படும். இந்நூலகத்தில் முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களின் படைப்புகளுடன், அரிய புத்தகங்கள், ஆராய்ச்சி வசதி, குழந்தைகள் பிரிவு, இணைய வசதியுடன் கூடிய மின் நூலகம் ஆகியவை ஏற்படுத்தப்படும்."

2. மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது நூலக இயக்குநர் கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்:-

(i) இந்திய கணிதவியலாளரும், பொது நூலகச் சட்டத்தை இயற்றியவரும், நூலக இயலில் "கோலன் நூற்பகுப்பாக்க" முறையை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தியவரும், இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படுபவருமான பத்மஸ்ரீ முனைவர் சீர்காழி இராமாமிர்தம் அரங்கநாதன் அவர்கள் பிறந்த ஊரான ஒருங்கிணைந்த நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் கிளை நூலகம் 1955-ஆம்

//த.பி.பா.//

ஆண்டு துவக்கப்பட்டு, அதன் பின்னர் 16.08.2008 முதல் முழுநேர கிளை நூலகமாக தரம் உயர்த்தப்பட்டு, தற்போது 1059 சதுரடி கொண்ட ரூ.6080/- மாத வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் தற்போது குடிமைப்பணி பிரிவு, குழந்தைகள் பிரிவு, மகளிர் பிரிவு மற்றும் இணையதளப் பிரிவுகள் உள்ளன.

(ii) சீர்காழி முழுநேர கிளை நூலகத்தின் புள்ளி விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மொத்த நூலிருப்பு | : | 51,752 |
| உறுப்பினர் எண்ணிக்கை | : | 10,081 |
| புரவலர் எண்ணிக்கை | : | 90 |
| ஒரு நாள் வாசகர் வருகை | : | 120 |
| ஒரு நாள் நூலிரவல் | : | 50 |
| ஒரு நாள் நூல்கள் பயன்பாடு | : | 60 |

(iii) இக்கிளை நூலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.18880/2017/ ஊ2, நாள் 11.05.2018-ன்படி சுமார் 0.0365 ச.மீ. (3929 சதுரடி) காலி இடத்தில் நூலகம் கட்டுவதற்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு முன்நுழைவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படும் பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்கள் நூலகங்களுக்கு ஆற்றிய மிகப் பெரும் சேவையினைப் போற்றும் விதமாக, அவர் பிறந்த ஊரான சீர்காழியிலுள்ள கிளை நூலகத்தினை சாதாரண மக்கள் முதல் ஆராய்ச்சியாளர்கள் வரை பயன்படுத்தும் வகையில்,. தனித்துவம் வாய்ந்த, அரிய பழமையான நூல்களுடன் நவீனமயமாக்கி புதிய தொழில் நுட்ப வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு, சீர்காழி முழுநேர கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட பெறப்பட்டுள்ள மேற்சொன்ன காலி இடத்தில் 1754 சதுரடியில் தரைத்தளம், 1754 சதுரடியில் முதல் தளம் மற்றும் 688 சதுரடியில் இரண்டாம் தளம் ஆக மொத்தம் 4,196 சதுர அடியில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2021-2022 ஆம் நிதியாண்டிற்கு பொதுப்பணித் துறையிடமிருந்து ரூ.1,36,73,000/- க்கான (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் மட்டும்) திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, சீர்காழி கிளை நூலகத்திற்கு முதற்கட்டமாக சொந்தக் கட்டடம் கட்ட பெறப்பட்டுள்ள காலிமனையில் "நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன்" நினைவாக 4196 சதுரடி பரப்பளவில் தரைத்தளம் முதல் இரண்டாம் தளம் வரை பொதுப்பணித்துறை மூலம் புதிய கட்டடம் கட்டுவதற்கான நிர்வாக அனுமதியும் (Administration Sanction) மற்றும் அதற்கான செலவினத் தொகையாக ரூ.1,36,73,000/-ஐ (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் மட்டும்) அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து வழங்குமாறும் பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. பொது நூலக இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 2021-2022-ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பான "முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகம்" என்ற தலைப்பில் வெளியிட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, சீர்காழி கிளை நூலகத்திற்கு முதற்கட்டமாக சொந்தக் கட்டடம் கட்ட

பெறப்பட்டுள்ள காலிமனையில் "நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன்" நினைவாக 4196 சதுரடி பரப்பளவில் தரைத்தளம் முதல் இரண்டாம் தளம் வரை பொதுப்பணித்துறை மூலம் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.132 இலட்சத்திற்கு (ரூபாய் நூற்று முப்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கலாம் என கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.50978/கல்வி-II/2021, நாள்19.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை - 2.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.

<u>நகல்</u>
அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.